1974 மார்ச் 14]

(இ) இவை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) and (இ) கும்முடிப் பூண்டித் துணை வட்டம், பூவளம்பேடு அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டுமனை மற்றும், மயானத்திற்குப் பாதை அமைப்பதற்காக நிலம் கையகப் படுத்தும் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த மாதிரி நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்குவதிலும், இடு காடடுக்கு வழி அமைத் துக் கொடுக்கும் திட்டமும் பல்லாண்டு காலமாக பரிசீலனையில் இருக் கின்றன. இவைகளுக்கென்று ஒரு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தி, எவை எவை நீண்ட காலமாக பரிசீலனையில் இருக்கின்றனவோ, அவைகளை விரைவு படுத்தி நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தாமதத்திற்குக் காரணம் நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஏற்படுகின்ற சிக்கல்தான் பெரிதாக இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள் தகராறு இல்லாமல் கொடுத்து விட்டால் இந்தத் தாமதம் பெரிதும் தவிர்க்கப்பட்டு விடும். தாமதத்தைத் தவிர்க்க எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

வைகைக் கால்வாய் சீர் அமைப்பு.

*419 வின.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், 1973–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2–ம் தேதி அன்று வின எண் 529–க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வைகைக் கால்வாய் சீர் அமைப்பு வேலை எந்த அளவுக்கு நடை பெற்று இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்த வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் ஏறத்தாழ 10 ஆண்டு காலமாக நடைபெற்றுக்கொண் டிருக்கிறது; இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, இந்த ஆண்டிலாவது முடிவடைகின்ற அளவுக்கு இத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, திட்ட வேலை களுக்கு 1968–ம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரம் முடிவடைவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

---

*–465ம் பக்கத்தில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.